அமரர் திரு. பொ. இன்பசாகரன்
நினைவு மலர்

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்
திருமுன்பு
திரு. ஆர். நாராயணசாமி ஐயர், B. A., L. T. அவர்களால்
5—7—68 வெள்ளிக்கிழமை அன்று
வெளியிடப்பட்டது.

ஔவை இலக்கிய மன்றம், தருமபுரி.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.



1616

அஞ்சலி

காலச் சக்கரத்தின் சுழற்சியில் எதுமாறியபோதிலும் அன்பின் வலிமை மட்டும் மாறுவதில்லை. அன்பில் பிரிவும், சேர்ந்து விட்டால் அதன் உறுதி மேன்மேலும் அதிகமேயாகிறது. நண்பன் திரு. பொன்னுசாமி இன்பசாகரனின் பொன்னுடல் மறைந்தது. ஆனால் அவரின் உத்தம இயல்புகளான பரிவு, பண்பு, பாசம், நன்றி, விருந்தோம்பல் முதலிய நற்செய்கை நற்குணங்களை என்றும் அவரின் எண்ணற்ற நண்பர் குழாம் நினைவுகூர்ந்து மனம் உருகுகின்றனர். அந்த புனிதமான அன்பின் நினைவைப் பரிவோடும், பாசத்தோடும் போற்றி அஞ்சலி செய்கிறோம்.

சு. சச்சிதானந்தம், B A, B T.
க. கிருஷ்ணமூர்த்தி, P. E T. (கிட்டாஞ்ஜி)
ஆ. கிருஷ்ணகுமார், B. A.,
க. சு. குருநாதன்,
அ. க. ஆத்மநாதன், B. Com. B. L. DPPA
ந. மனோகரன், B. A., (Hons)
கு. காளியப்பன்,
இரா. குணசீலன், செயலாளர்.

நிர்வாகிகள், ஔவை இலக்கிய மன்றத்தார்.



எப்பாலும் போற்றும் இசைத்தமிழ்ச் செல்வா! என்
நண்பா! அழகிய இன்பா!--இப்பாரில்
சிந்தை குளிரச் சிரித்தொளிரும் உன் முகத்தை
எந்த நாள் காண்பேன் இனி?

தகடூர்க் குமரன் அச்சக அதிபர்

திரு. இன்பசாகரன் மறைவின்போது

ஔவை இலக்கிய மன்றத்தினர் கூறிய

கையறு நிலை

" அகந்தன்னில் நினைத்திருப்பாய் அன்ப ! "

1. தருமபுரிதனில் குமரன் அச்சகத்தின் தலைவராம் பொன்னுச்சாமி
அருமனைவி இரத்தினு ஈன்றெடுத் அன்பு இன்பசாகரப்பேர்
திருமகனே ! பெருமகனே ! திகழ்ந்திடு நல்பண்பு எலாம் திகழப்பெற்றாய்
பெருமைவிட்டுப் பொருளிட்ட நினையாதாய் எங்குற்றாய் பேதுற்றோம் யாம்

2. ஆயிரத்தித் தொளாயிரத்து முப்பத்தேழாம்ஆண்டு திசம்பர்த்திங்கள்
தாயிரத்தம் தனில்ஊறி மகவாகித் தவந்துகற்றுத் தந்தையாய்ப் பல்
லாயிரத்தில் ஒருமகனாய் அமைகுமரன் அச்சகத்தில் முதல்வனாக
நியிருந்தாய் முப்பத்தோராண்டினிலே மறைதுயரம் நெஞ்சில் நஞ்சே

3 இந்தஇளம் வயதினிலா இறப்பணங்கு உமைத்தீண்டவேண்டு நீதான்
தந்ததுயர் தனை நினைக்கில் கடல்அணுவாய் மலைதுகளாய் காணும் அய்யா
எந்தவிதம் இத்துயரை எங்கள் உள்ளம் தாங்கிடும் ஈதென்னே என்னே
வந்தவழி எனஎண்ணி வாய்விட்டுக் கதறுதலே பின்வாழ்வாம்.

4. ஔவை இலக்கிய மன்றின் அருந்தலைவ ! தந்தை
பொன்னுச்சாமிப் பேர்கொள்
செவ்வைப் பூர்பந்தாட்டக் குழுவினுக்குப் பொருளாள
செம்மைசாலும்
மௌவல் கமழ் குழலாராம் நின்மனைவி காஞ்சனை மனத்தின்
வாட்டம்
எவ்விதத்தில் நீங்கிடுமோ என்செய்வோம் அன்றால் நாம்
என்செய்வோமே

5. தந்தையார் மறைவின்பின் தாயாரை உடன்பிறந்தோர்
தங்கைதம்மை
மைந்தனாய்க் காப்பாற்றி மதலையாய்த் தாங்கிநின்ற சுமையை
யார்தான்
இந்தநாள் காப்பதற்கு எனஎண்ணிவருந்திடவே இருகுழந்தை
தந்தையாம் உனைஎண்ணித் தாம்வாழும் நாள்வரைக்கும்
தவிக்குமையோ !

6. சுற்றத்தார் தோழரொடும் சூழநின்றார் யாவரையும்
விட்டுநீங்கிப்
பற்றற்றார் தமைப்போல பார்துறந்து அன்போ எங்கேகினாயோ?
முற்றத்தான் துறந்தோரும் பற்றற்றார் தமைநினைந்து
முகிழ்வர் நெஞ்சம்
ஏற்றுக்கு எங்கள்மனம் எரிநெருப்பின் மலராக எரிந்ததையோ

7. அமைதிதவழ் திருமுகத்தாய் அன்புகொண்ட பெருமனத்தாய்
ஆன்றவனை
இமைப்பொழுதும் மறவாத இயல்பதனில் பழகினாய், இனி
உன்போல
கமையான ஒருமகனைக் காணும்நாள் எந்நாளோ கலந்தஆவி
அமைதியினில் நினைத்திருக்க அகம்தன்னில் நிலைத்திருப்பாய்
அன்ப ! அன்ப !!

— *புலவர் இரா. எழில்நிலவனார்*

தருமபுரி ஔவை இலக்கிய மன்றத் தலைவர்
திரு. P. இன்பசாகரன்
வாழ்க்கை வரலாறு

நாடு — நகர்

மன்னிய புகழும் மறுவில் வாய்மையும் இன்னிசை முரசும் ஓவா கொடைச் சிறப்பும் தமிழ்ப்பகை நீக்கி தமிழகம் காத்தத் தாவா படைமறமும் மேம்பட்டு விளங்குமாறு ஆட்சி நடாத்திய மாட்சிமைக் குரிய சேரவேந்தர்களது பண்டைய தலைநகரம் தருமபுரி. நீராலும் நிலத்தாலும் குடிமக்களாலும் சீரார்ந்து விளங்கும் இவ்வூர் தேனூர் செந்தமிழ் சங்கப்புலவர் களால் 'தகடூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. மாநிதியினால் பெறமுடியாத நிலைத்த பெரும்புகழை தீங்கனியொன்றாலே தேடிக்கொண்ட பெருமைக்குரியவன் அதியமான் நெடுமான் அஞ்சி. வரையா ஈகைவள்ளல் அஞ்சியின் புரையில் ஆணையால் பொலிவுற்று விளங்கிய அறநகராகிய தகடூரே இந்நாளைய தருமபுரி.

குலம் — குடி

இத்தகு வரலாற்றுச் சிறப்புடைய தருமபுரியில் குடிவளம் குறைவின்றி செழித்திருந்தது. பெருமைக்குரிய குடிகளில் பெருமாள்பிள்ளையின் குடும்பமும் ஒன்று. அவரது செல்வப்பிள்ளைகளாகத் தோன்றிய நால்வரில் திருவாளர் பொன்னுசாமிப்பிள்ளையும் ஒருவராவார். நீதிக் கட்சியின் தொண்டராகவும், தலைவராகவும், அரிசன மாணவர் விடுதியை முதன் முதல் தொடங்கி நடத்திய சீர்த்திருத்தச் செம்மலாகவும் விளங்கிய பொன்னுச்சாமியின் இன்னுயிர்த் துணையாக திருமதி இரத்தினம் அம்மையார் வாய்த்தார். இவர்களது இல்லறம் விளைத்த நல்லறப் பயனாகத் தோன்றிய மக்கட் செல்வங்கள் எண்மரில் திரு. இன்பசாகரன் இரண்டாவது பிள்ளையாகும்.

தந்தையார் பிரிவு

இந்தி எதிர்ப்பில் சிறைசென்றவரும், அனைத்துலக தமிழர் பேரவையில் உறுப்பினராகி பணியாற்றியவரும் (இந்நாள் நீடுதுயில் கொண்ட) இன்பசாகரனின் தந்தையுமாகிய பொன்னுசாமி தமது குடும்பமும், தமது தமையனுர்களான திரு. கஸ்தூரிப்பிள்ளை, திரு. அப்பாவுப்பிள்ளை முதலியவர் குடும்பங்களும், உறவினர்களும் ஆராக்கண்ணீர் சிந்த 20-5-1960 பேராவியற்கை எய்தினர்.

இல்லறம்

தந்தையார் விட்டுச் சென்ற குமரன் அச்சகத்தை நடத்தும் பொறுப்பினை அடைந்த இன்பசாகரன், திருமதி. காஞ்சனதேவி எனும் நங்கையை 19-6-64-ல் வாழ்க்கைத் துணைவியாக்கப் பெற்றர். துவரா நட்புடன் இல்லறம் இனிது நடைபெற்றது

மக்கட் பேறு

"யாழொடுங் கொள்ளா பொழுதொடும் வாரா
பொருளறி வாரா ஆயினுந் தந்தையர்க்கு
அருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை" என்ற

ஒளவையின் செவ்விய மொழிக் கேற்ப மழலை வழங்கும் மக்கள் பொன்னுசாமி (எ) பாலாஜி அரவிந்தன் ஆகிய இருவரைப் பெற்றெடுத்துப் பேணி மகிழ்ந்தனர்.

தொண்டுகள்

மாணவப் பருவத்தில் பள்ளியில் விளையாட்டுக்குழுவின் தலைவனாக விளங்கிய அனுபவத்தைக்கொண்டு தந்தையின் பெயரால் "பொன்னுசாமி நினைவு விளையாட்டுக் கழகம்" ஒன்றின் அமைப்பாளராகவும், பொருளாளராகவும் விளங்கி 1967-ல் மாநிலம் முற்றும் கலந்து கொள்ளற்கேற்ற கால்பந்தாட்டப் போட்டியையும் மாவட்ட அளவில் கலந்துகொள்ளத் தக்கபூப்பந்தாட்டப் போட்டியையும் நடத்தினர்.

விளையாட்டில் ஆர்வமிக்கிருந்த இன்பசாகரன் இலக்கிய உணர்விலும் தமிழ்ப்பற்றிலும் குறைந்தவரல்லர். தகடூர் வாழ் மக்களை இலக்கியச்சுவைஞராக விளங்கச் செய்ய வேண்டும். என்று நற்றமிழ் உணர்வுடையோரால் தோற்று விக்கப்பட்ட "ஒளவை இலக்கிய மன்றத்திற்கு" ஆயுட் தலைவராக விளங்கினர். இவரது அயரா முயற்சியால் தகடூர் மக்கள் பல செந்தமிழ் அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள்

திருவாளர்கள் தே. கண்ணன், பிரகாசம், பி. ஏ., பி டி., சென்னகேசவன், வி. ஆர். ஜெகதீச முதலியார், இராமமூர்த்தி, எம். ஏ., பி. டி., கோட்டாட்சித் தலைவர் திவான்முகமது, மாவட்டக் கல்வி அதிகாரி நாகராசன், ம. பொ. சிவஞானம், சு. செல்லப்பன், திருமதி காளியம்மாள் முதலிய பெருமக்கள் அவ்வப்போது மன்ற நிகழ்ச்சிகளில் தலைமை இடத்தைப் பொலிவு செய்ய பேராசிரியை திருமதி ஆர். ஆர். இந்திரா, எம். ஏ., திருவாளர்கள் ஏ, கே. விஜயபானு, எம். ஏ., பி. எல்., புலவர் ந. ஜெகதீசன், திருக்குறள் வி. முனுசாமி, குன்றக்குடி அடிகளார், புலவர் மு இராமசாமி, பழனி அரங்கசாமி, எம். ஏ., கு இராசவேலு பேராசிரியர் கோவிந்தராசனர், பேராசிரியை குழந்தையம்மாள், திருவாளர். சா. கணேசன், இரா. பெ. இராமச்சந்திரனர், சே. ரா. குமாரசாமி பி. ஏ , புலவர்கள், சுப்பு, முத்தையன், இளங்கோவன் ஆகிய பேரறிஞர்களை அவ்வப் போது செஞ்சொல்விரிவுரை ஆற்றச் செய்தார். இலக்கிய மன்றம் சிறப்பாக இயங்கவேண்டும் என்பதற்காக செயல் படும் வகையை நேரில் கண்டறிய ஈரோடு கள்ளிப்பட்டி முதலிய இடங்கட்கு நண்பர்களுடன் சென்றுள்ளார்.

திருக்குறள் வகுப்பு அறத்துப்பால் முடிய கிழமை தோறும் நடத்த ஆவனசெய்தமையும் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு நடத்த பெருமுயற்சி எடுத்துக் கொண்டமையும் நினைவு கூறத்தக்கது. பொங்கல் விழாவிலே தருமபுரியில் முதன் முதலாகப் பட்டிமன்றம் நடாத்திய பெருமையை அடைந்தார்.

குமரன் அச்சகம், சிவா சுற்றுலா வண்டி நிர்வாகம் முதலியவற்றின் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினர்.

அமரவாழ்வு

விருந்தோம்பல், நட்புப் பேணல், பொறுமை, நியாய மனப்பான்மை, நுண்ணுணர்வு தமிழ்ப்பற்று ஆகிய நற்பண்புகள் அமைந்தவராக விளங்கிய திரு பொ. இன்பசாகரன் 9—6—68 ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணியளவில் நற்றுணையும், பிள்ளைகளும், சுற்றமும், கற்ற. நண்பர்கள் கலக்கமுற மண்ணுலக வாழ்வை நீத்துப் பொன்னுலகம் புகுந்தார். 10—6—68 திங்களன்று மூத்த சகோதரர் திரு மனோகரன் சிதைக்குத் தீமூட்டினர்.

இடுகாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி. ஏ எம். சுப்பிரமணிய செட்டியார் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. மறைந்த 'இன்பன்' பண்புகளை திருவாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கரிவேங்கடம் பி ஏ., பி. எல், ஆசிரியர் அருள்மூர்த்தி, அங்கண்ணன், ஸ்ரீராமுலு, பெரும்பாக்கன், டி. சி. பெரியசாமி த. சு. வீரமணி முதலியோர் புகழ்ந்து பேசினர்கள்.

11—6—68ல் பார்த்துத்தெளிதல். 14—6—68ல் திருக்குறள், திருவாசகப் பாராயணத்துடன் அஸ்தி கரைத்தல் ஆகிய இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன.

திருவாளர் இன்பசாகரன் மறைவின் விளைவாக 11—6—68-ல் நடை பெறவேண்டிய திருக்குறள் வகுப்பு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதுவரையில் இல்லாத வகையில் ஒத்தியும் வைக்கப்பட்டது.

5—7—68-ல் இன்பன் நினைவாக ஔவை இலக்கிய மன்றக்கூட்டத்தில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சேலம் இணை வணிக வரி அலுவலர் கல்லை தே கண்ணன் அவர்கள் தலைமை தாங்கினர். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் நினைவுச்சொற்பொழிவாற்றினர் திருமதி. எம். ஆர். காளியம்மாள் அவர்கள் அமரர் இன்பசாகரன் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். ஒய்வு பெற்ற தலைமையாசிரியர் ஆர். நாராயணசாமி, பி. ஏ. எல். டி., அவர்கள் நினைவு மலரை வெளியிட்டார்.

என்னே சொல்லி அழுவோம்?

1. தந்தை பொன்னு சாமியைப்போல்
 தமிழர் உயர்வுக் குதவி அவர்
சிந்தை களிக்கச் செய்வாய்நீ
 சிறக்கும் தகடூர் என்றிருந்தோம்
எந்தம் எண்ணம் கனவாக
 எழிலார் இன்பசாகரனே !
கொந்தும் அழற்கை காலன்உனை
 கொண்டோ சென்றான் ஐயாவோ

2 உழைப்பால் உயர்ந்த தந்தைக்கு
 உயிராய் வந்தோய்! நோய்நீங்கி
பிழைப்பாய்! வாழ்வாய்! பிறர்துன்பம்
 போகச் செய்வாய்! செல்வத்தால்
கொழிப்பாய்! நாளும் விருந்தோம்பி
 களிப்பாய் என்று நினைத்தோமே!
அழிப்பாய் அதையென் றெண்ணேமே!
 அந்தோ பிள்ளாய் சதிசெய்தாய்!

3. சித்தம் கலங்கா செல்லையா
 சீராளா உன்பிரிவழலால்
பித்தம் பிடித்தாற் போலானன்
 பெற்றாள் துயரோ பேசொண்ணு
கத்திக் கதறி உளஞ்சோர்ந்து
 கலங்கிச் சாய்ந்தாள் துணைவந்தாள்
முததுச்சிட்ரே ! ஓவியமே !
 முன்னோர் துயரில் வீழ்ந்தாரே

4. அருகில் நின்று நோய்போக
 ஆனது செய்த நண்பாவார்
கருகிக் குமுறி அழுகின்றார் !
 காதல் தந்தை முன்வந்த
முருகின் பெரியோன் கஸ்தூரி
 முற்றும் வலுவை இழந்தனனால்
பெருகத் துயரில் வீழ்ந்தார்கள்
 பின்னும் முன்னும் பிறந்தோர்கள்.

5. பொன்னே ! குமரஅச்சகத்தின்
 பொறுப்பே ! இருப்பே ! தொழிலாளர்
மன்னே ! நண்பர் ஆருயிரே
 மகிழ்வாய் இலக்கியசொற் கேட்க
முன்னே வருவாய் ! மறைந்தாயே
 முடியாதப்பா உனை மறக்க
என்னே சொல்லி அழுவோம்யாம்
 எங்கே அதற்கு சொல்லுண்டு.

— *ந. தீ. சிவலிங்கம்*

தளராத பணி

தமிழ்மணக்கும் அதியன்வளர் தகடூர் தன்னில்
 தலைமகனைத் தழைத்திட்ட பொன்னு சாமி
அமிழ்தெனவே ஈன்ற அருள் இன்ப சாகர் !
 ஆன்றோரும் இளையோரும் துயரில் மூழ்க,
இமிழ்கடல்சூழ் உலகுபுகழ் ஔவை பேரால்
 ஏர்கண்ட மன்றத்தார் கலங்கிச் சோர,
தமிழ்அமுதை வானாட்டார் துய்ப்பதற்கோ
 தளராத பணிசெய்ய பிரிந்து சென்றாய் !

—*புலவர் வை. முத்தையன்*

'மாற்றும் மருந்தேது'

[மு. அரங்கசாமி, ஆசிரியர்]

அன்பின் விளைபலனே! அருளின் நிலைக்களனே!
என்றும் நினைவகலா எம் இன்பசாகரனே!
அன்பின் அலையை ஆழ்துயரில் சாய்த்தனையே!
துன்பப் பெருந்தீயும் சுவைக்க உனை ஈந்தனையோ:

ஆறாய்ப் பெருகிவரும் நீருக்கும் அணையுண்டு
நீறாகிப் போகுமொரு நிலைமாற்ற நீருண்டு
வேறாகிப் போவதன் முன் விதிமாற்ற மார்க்கமின்றி
கூறாமல் கூற்றுவனின் கொடும்பசிக் காளாயினையோ

கண்ணீர்க் கடலிலெமை கலங்கித் தவிக்கவிட்டு
செந்நீர்ச் சுவறிவிட செவ்வாயிதழ் வெளுக்க
மண்மீதில் நீயும் வந்தவினை முடித்து
விண்ணேறிப் பாய்ந்து மின்னாய் மறைந்தனையே!

'கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல் காத்திருந்தும்
மண்ணை மலரணையாய் மதித்தே அன்மடியில்
கண்ணுறங்கச் சென்றாயோ! சலங்கும் மனத்திலெலாம்
புண்ணைவைத்துப் போனாயோ புனிதத் தமிழ்மகனே!

ஏற்றிவைத்த தீபத்தை எம்கரங்களால் மறைத்தோம்
காற்றின் கொடுங்கரமோ கடுகி அணைத்ததுவே!
கூற்றுவனோ உன்னுயிரைக் குடித்தே அகம்குளிர்ந்தான்!
மாற்றும் மருந்தெங்கள் மனநோய்க்கிங் கேதய்யா!

திரு. இன்பசாகரன்
மறைவு குறித்து வந்த இரங்கற் கடிதங்களில் சில

அன்பு சான்றநல் லநமை யினொருநம்
இன்ப சாகரன் இயற்கை யெய்திய
துன்பு கண்டுளந் துயர்வ தல்லது
நன்பெ துஞ்செய நண்ண வில்லையே!

—தேவநேயப்பாவணர்.

பொ. இன்பசாகரன் அவர்கள் பிரிவால் துன்புறுந் தங்கள் துன்பத்திலும் பங்கு பெறுகின்றோம்.

—புலவர் வை. பொன்னம்பலனார்.
செந்துறை-திருச்சி.

அரிய நண்பர் மறைவு மிகவும் துக்கத்தை அளிக்கிறது இயற்கையின் சதி. ஆறுதல் பெறுவீர்களாக. நல்ல அன்பனை இழந்தோம்.

திருக்குறளார் வி. முனுசாமி, B. A., B. L.,

திரு. இன்பசாகரன் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டம் அன்னாரின் உயிர் இன்ப அமைதியடைவதாக

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

எப்படி ஆறுதல் சொல்வது என்று எனக்கு தோன்ற வில்லை.

—தியாகராசன்,
புது டெல்லி.

அவரின் இழப்பு நண்பர் குழாமுக்கு பேரிடி

—*ஆர். சிங்காரம்*, B. Com.
சேலம்-1.

இன்பசாகரன் நம் அனைவரையும் இவ்வளவு சீக்கிரம் துன்பசாகரத்தில் ஆழ்த்துவார் என என்னால் நம்ப முடியவில்லை......... ...அவரது பிரிவுத்துயரத்தில் உள்ள உங்கள் அனைவருக்கும் இதைத்தான் சொல்கிறேன் - நாமும் ஒரு நாள் சென்று அவரை சந்திக்கத்தான் போகிறோம். இன்று பிரிந்த நாம் நாளை ஒன்று சேருவோம். பிரிவு தற்காலிகமானதுதான்.

—இரா. பெருமாள்ராசு, B A., B. T.,
கிருட்டினகிரி.

அன்பர் திரு. இன்பசாகரன் அவர்களின் பூதவுடம்பு அழிந்து போயினும், அன்னார் உருவெளித்தோற்றமும், குணமும், செயலும் அவர் மாட்டு அன்புடையார் அனைவருக்கும் நேர் நின்று காட்சியளிப்பதுபோல் மனவுலகிற் ஓர் தோற்றமுண்டாம்.

திரு. N. இராஜா சுப்பிரமணிய செட்டியார்,
நாகரசம்பட்டி.

மனம் வேதனை அடைந்தது. ஆண்டவன் அருள் அவ்வளவு தான்போலும்.

—திரு. T. தீர்த்தகிரி கவுண்டர், M. L. A,
அரூர்.

May his soul rest in peace !

—*The Madras Type Foundry*

குழந்தையை பெற்றவர்களுக்குத்தான் அவர் குழந்தையின் அருமை தெரியும். நான் தங்களைப்போல் துர்ப்பாக்கியத்தை அடைந்தவன். எல்லாம் இறைவன் செயல்.

—Dr. P நடேசன், M B. B S.,
சென்னை-1.

I was really shocked to hear that Inbasagaran is no more ... ... May his soul rest in peace.

K. K. Bharathan B. A., Madras-6

I pray the Almighty to give a resting peace to his soul,

M Kaliappa Chettiar, B. A., L. T.,
Kaveripatnam.

ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

– தே வே. சந்தானம்,
ஊத்தங்கரை.

அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தீ. சொக்கலிங்க கவுண்டர்,
மொரப்பூர்.

மகிழ்வுடன் இனிது வாழ வேண்டிய கட்டிளங்காளைப் பருவத்தில் தம்பி திரு இன்பசாகரன் மறைவுற்றதை எண்ணுந்தோறும் நெஞ்சம் நெக்குருகிறது.

இரா. பெ. இராமச்சந்திரன்,
காவேரிப்பட்டணம்,

.. Beyond the power of Sword and Fire
Beyond the power of Water and Wind
The Spirit is Everlasting and Omnipresent;
Never changing, Never moving, Ever one
The Spirit that is in all beings is immortal in them all.
For the death of what cannot die, Cease thou to Sorrow ".

*

" When Beggers die there are no Comets,
the Heavens themselvs blazeforth the death of princes "

ஏங்க வைத்த தேனே ?

வானத்து மீனெல்லாம் வருந்தி நிற்க
வடிவழகுப் பெருநிலவு வீழ்தல் போல
கானத்துக் குயிலினங்கள் பாடா தோட
கருங்குரங்கு மரமேறித் துரத்தல் போல
தேனீந்த ஈக்களெல்லாம் செத்துப் போக
திரண்டிருந்த கூடொன்று சாய்தல் போல
எனிந்தத் துயர்தந்தாய் இன்பா நீயும்
இங்கிருக்கும் நண்பர்களை ஏங்க வைத்தாய் ?

—துரைகணேசன், தருமபுரி.

---

*" **Conscience is Gods' presence in Man** "..................*

Gaining the faith and Confidence, by a young man like Mr. Inbasekaran, of everybody, especially elders and scholars is a boon. He was a man to be remembered ever and loved by all.

*,' **Mans' Extremity is Gods' oppurtunity** "....... ....*

G. S. Gurunathan,
81, Bazaar Street, DHARMAPURI-2

துடிப்புள்ள என்நண்பன்
என்நெஞ்சைத் தொட்டுவளர்ந்
திருந்த தோழன்,

மடிந்தானா? மெய்தானா?
நட்புத்தேன் மலர்நெஞ்சன்
உதிர்ந்தா விழ்ந்தான்?

நெடியகொடுஞ் சாவின்கை
நிலைகுலைந்த சருகுகள்பால்
நீளா மல்தேன்

வடிக்கின்ற பருவமலர்
பறித்ததுவோ! மனந்தளர்ந்தேன்
வாடு கின்றேன்!

கண்ணீரில் மிதக்கின்ற
பெற்றவரே! கைப்பிடித்த
தங்கையே! நான்

புண்பட்டு வருந்துகின்ற
உங்களுடன் புலம்புகிறேன்
திரட்டி வைத்த

வெண்ணெயினைச் சாவுத்தீ
உருக்கிவிட்ட வெங்கொடுமை
பொறுப்போ மாநாம்!

வெண்ணிலவில் செங்கதிரில்
ஒளியாட்சி வீழ்ந்ததின்று!
இருள்வாய்ப் பட்டோம்!

—புலவர் ந. செகதீசன், ஈரோடு.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

குமரன் அச்சகம்,
அஞ்சகாரத்தெரு, தருமபுரி-1